காட்டுவது படம்.. காப்பது மரம்!

■ ஜி.மீனாட்சி

ஓய்வு நேரங்களை வீணடிக்காமல் பள்ளி, கல்லூரிகளைத் தேடிப் போய் மரம் நடுதல் குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார் ஒரு கண்டக்டர்

அது ஒரு தனியார் பள்ளி. மைதானம் முழுவதும் மாணவர்கள். அவர்களுக்கு நடுநாயகமாக நின்றுகொண்டிருக்கிறார் ஒருவர். அவரது அருகே ஒரு புரஜெக்ட்டர். புரஜெக்ட்டரை இயக்கி ஸ்லைடு படங்களை மாணவர்களுக்குக் காட்டி விளக்கமளித்துக் கொண்டிருந்தார் அவர்.

''மரங்கள் உங்களுக்குத் தேவையான காய்கள், கனிகள், இலைகளை வழங்குகின்றன. நிழல் தருகின்றன. நீங்கள் சுவாசிக்கத் தேவையான சுத்தமான காற்றைத் தருகின்றன. உங்கள் தாயைப்போலத் திகழும் மரங்களை வெட்டலாமா? யோசித்துப் பாருங்கள்'' - கணீரென்ற குரலில் அவர் பேசுவதை சிலிர்ப்புடன் கேட்டுக் கொண்டிருந்தனர் மாணவர்கள்.

''மரம் அறுந்து விழுந்தபோது
இறந்து கிடந்த
குருவியின் வாயில் இருந்தது
தன் குஞ்சுக்கான ஆகாரம்'' என்று

கவிதை படித்தபோது, மாணவர்கள் சற்று அதிர்ந்து போனார்கள்.

''சிட்டுக் குருவிகளை நீங்கள் ஏன் இப்போதெல்லாம் பார்க்க முடிவதில்லை தெரியுமா? கூரை வீடுகள் இல்லாததால் சிட்டுக் குருவிகள் நம்மைவிட்டுப் போய்விட்டன. செல்போன் டவர்களில் குடியிருக்க ஆரம்பித்துவிட்டன'' என்று உருக்கமாகச் சொல்லும்போது மாணவர்கள் கண் கலங்கினர்.

ஸ்லைடு ஷோ முடிந்ததும் நேராக பள்ளி மைதானத்துக்குச் சென்று மரக்கன்றுகளை நடுகிறார் அவர். மாணவர்களும் அவரைத் தொடர்ந்து மரக்கன்றுகளை நட ஆரம்பிக்கிறார்கள்.

யோகநாதன்

தனது புரஜெக்ட்டருடன் புறப்படும் அவர் - யோகநாதன். கோவை அரசு போக்குவரத்துக் கழகத்தில் நடத்துநராகப் பணியாற்றி வருபவர். தமிழகம் முழுவதும் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மரம் நடுதலின் அவசியம் குறித்து விளக்குவதற்காக புரஜெக்ட்டரும் கையுமாகத் திரிபவர். கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இந்தச் சேவையில் ஈடுபட்டு வருகிறார் யோகநாதன்.

மரங்களின் மீதான நேசம் யோகநாதனுக்கு எப்படி ஏற்பட்டது?

''மயிலாடுதுறைதான் என் சொந்த ஊர். அங்கு படிக்கும் காலத்தில் என்.சி.சி., என்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளில் என்னை இணைத்துக்கொண்டு சமூக சேவையில் ஈடுபட்டிருக்கிறேன். அந்த உணர்வு இப்போதும் என்னுள் நிரம்பியிருக்கிறது. ''1987ல் கோத்தகிரியில் என் சகோதரி வீட்டில் தங்கியிருந்தபோது, ஜூனியர்

தலைவராக இருந்தேன். ஜே.சி.ஐ. சார்பில் சமூக சேவை, மரம் நடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வந்தோம். ஒரு காட்டுக்குப் போய், அங்கு மரக்கன்றுகளை நட்டு, அவை வளரும்போது, 'இது நான் வளர்த்த மரம்' என்று பெருமிதப்படுவேன். தமிழ்நாடு பசுமை இயக்கம் சார்பில் இயற்கையைப் பாதுகாக்கும் பல பணிகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். கோத்தகிரி காடுகளில் சுற்றித் திரிந்து கவிதை எழுதுவது என் பொழுதுபோக்கு. இயற்கை மீதான ஆர்வமும்,

துணை ஜனாதிபதியிடம் விருது...

அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற முனைப்புமே, மரம் நடுவதை ஒரு பேரியக்கமாக மாற்றும் வெறியை எனக்குள் ஏற்படுத்தின. இயற்கைப் புகைப்படங்களை எடுக்கும் வழக்கமும் எனக்கு இருந்தது. இயற்கையைப் பாதுகாத்தல், மரங்களை நடுதல் குறித்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்பினேன். ஏனெனில், மாணவப் பருவம்தான் சமூக சேவைகளுக்கு ஏற்ற பருவம். இதற்காக ₹ 14,000 கொடுத்து ஒரு புரஜெக்ட்டரை வாங்கினேன். சேலத்தைச் சேர்ந்த டாக்டர் மயில்வாகனன் என்பவர், வன உயிரினப் புகைப்படங்களை எடுப்பதில் பெயர் பெற்றவர். அவரும், டாக்டர் டால்ஸ்டாய், ராமச்சந்திரன் போன்றோரும் என் பணிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், வன உயிரினங்கள், இயற்கைக் காட்சிகள் நிறைந்த சிலைடுகளைத் தந்தனர். நீலகிரி மலைப் பகுதியில் லாங்வுட் சோலையில் நிறைய மரங்களை நட்டுள்ளோம். தொழிற்சாலைகள், வீட்டு மனைகள் போன்ற கட்டுமானப் பணிகளுக்காக மரம் வெட்டுபவர்களின் மனங்களை மாற்றும் வகையில் தெரு நாடகங்கள் போட்டோம். போராட்டங்கள் நடத்தினோம். இதனால், நிறைய எதிர்ப்புகளையும் சந்தித்தோம்...'' என்று தனது அனுபவங்களை விவரிக்கிறார் யோகநாதன்.

இதுவரை 2,862-க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று மரம் நடுவது குறித்து பிரசாரம் செய்திருக்கிறார் யோகநாதன்

இதுவரை 2,862-க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று ஸ்லைடு ஷோ மூலம் மரம் நடுவது குறித்து பிரசாரம் செய்திருக்கிறார். இவரது பேச்சால் கவரப்பட்ட மாணவர்கள் பலர், சென்ட், நெயில் பாலீஷ், லிப்ஸ்டிக் பூசுவதில்லை என்று சபதம் எடுத்திருக்கிறார்களாம். காரணம், இவற்றில் எல்லாம் குளோரோ புளோரோ கார்பன் உள்ளதால், இவை உடல் நலத்துக்குத் தீங்கு என்பதை எடுத்துக்கூறி வருகிறார். அதற்குப் பதிலாக கைகளுக்கு மருதாணி, உடைகளில் பூசிக்கொள்ள ஜவ்வாது போன்ற இயற்கைப் பொருட்களுக்கு மாறும்படி மாணவர்களை வலியுறுத்தி வருகிறார்.

யோகநாதனின் பேச்சால் ஈர்க்கப்பட்ட கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி மாணவர்கள், தீபாவளிக்கு பட்டாசு வெடிப்பதில்லை என்ற சபதத்தை எடுத்துக் கடைபிடித்து வருகிறார்கள். பள்ளியில் நடப்படும் மரக்கன்றுகளுக்கு அதை நடும் மாணவர் பெயரையே சூட்டி, அவர்கள் மனங்களில் ஆர்வத்தை விதைக்கிறார் யோகநாதன். புங்கைமரக் கன்றை நட்ட செல்வி என்ற மாணவியின் பெயரில் 'செல்வி புங்கை மரம்', சந்திரன் என்ற மாணவர் நட்ட வேப்ப மரக்கன்றை 'சந்திரன் வேப்பமரம்' என்று பெயரிட்டு அழைக்கிறார். நட்ட மரத்தைப் பாதுகாத்து பராமரிக்கும் விதத்தையும் மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறார்.

''நட்ட மரத்தைச் சுற்றி, காய்ந்த இலைகள் 10-ஐ தினமும் போட்டு, ஒரு பாட்டில் தண்ணீர் ஊற்றி பராமரித்து வந்தால், ஒரு மாதத்தில் உரமாகிவிடும். அந்த உரமே மரம் வளர உறுதுணையாக இருக்கும் என்று மாணவர்களிடம் சொல்வேன். அதை மாணவர்களும் சரிவரச் செய்து வருவார்கள். பால் பாக்கெட்டுகளை வாங்கி அதில் மண்ணை நிரப்பி, விதை போட்டு மரக்கன்றுகளை வளர்த்துக் கொடுக்கிறேன்'' என்கிற யோகநாதன், தனது சேவைக்காகத் தமிழக அரசின் சுற்றுச்சூழல் செயல் வீரர் விருதை இந்த ஆண்டு பெற்றுள்ளார். 'பச்சை மனிதன்', 'இயற்கையின் காதலன்' உள்ளிட்ட ஏராளமான பட்டங்களையும் பல்வேறு சமூக அமைப்புகளிடமிருந்து பெற்றுள்ளார். 2008ல் உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி 'பசுமைப் போராளி' என்ற விருதை குடியரசு துணைத் தலைவர் ஹமீத் அன்சாரியிடமிருந்து பெற்றார். டெல்லியிலுள்ள எர்த் மேட்டர்ஸ் ஃபவுண்டேஷன் சார்பில் சிறந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் விருதையும் பெற்றுள்ளார்.

மரம் வெட்டுவதால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைக்கும் 'தாகம்' என்ற குறும்படத்தையும் இயக்கியிருக்கிறார் யோகநாதன். அதற்கு கேமராமேனாக இருந்துள்ளார் திரைப்படத்துறையில் பணியாற்றும் அரவிந்த். நடத்துநர் பணி நேரம் போக கோவை அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில் உள்ள மாநில என்.எஸ்.எஸ். திட்டப் பயிற்சி மையத்தின் ஆசிரியராகவும் இருப்பதால், மாநிலம் முழுவதிலும் இருக்கும் பள்ளிகள், கல்லூரிகள், பாலிடெக்னிக்குகளுக்குச் சென்று மாணவர்கள் மத்தியில் பிரசாரம் செய்வது எளிதாக இருப்பதாகக் கூறுகிறார்.

ஒவ்வொரு மாணவரும், தம் பிறந்த நாளன்று ஒரு மரக்கன்றை நட்டு, பராமரித்து வளர்த்து வரும் வகையில் 'உயிர் வாழ ஒரு மரம்' என்ற திட்டத்தை உருவாக்கியிருக்கிறார். இதுவரை 14,400 மாணவர்கள் இத்திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்களாம்.

நடத்துநர் பணியுடன் இதுபோன்ற சேவைகளில் ஈடுபட எப்படி நேரம் கிடைக்கிறது இவருக்கு?

''ஓய்வு நாள், மற்றும் விடுமுறை தினங்களில் வெளியூர்களுக்குச் சென்று மரம் வளர்ப்பு விழிப்புணர்வுப் பிரசாரத்தில் ஈடுபடுகிறேன். வேலை நேரம் போக, கிடைக்கும் ஓய்வு நேரங்களில் உள்ளூரில் பிரசாரம் செய்கிறேன். மனைவி, குழந்தைகளும் என் சேவைக்குத் தடை சொல்வதில்லை'' என்கிறார் இந்த 'பசுமைப் போராளி'. ■